தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# அனைத்துலகத் தேர்வு

# 2011

# தமிழ்மொழி

# ஆண்டு 11

நேரம்: 180 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

## 1) தேர்விடை வினா - விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. திங்களைப் போற்றும் எனத் தொடங்கும் வாழ்த்து எந்த இலக்கியத்திற்கு உரியது?

அ) மணிமேகலை ஆ) நளவெண்பா இ) திருக்குறள் ஈ) சிலப்பதிகாரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. காவிரிப்பூம் பட்டினத்து இளவேனிற்கால கடற்கரை விழா

அ) வைரவிழா ஆ) இந்திரவிழா

இ) கால்கோள்விழா ஈ) பொங்கல் விழா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. செவி உண்டளவே தோற்றான் உயிர் யார்?

அ) கோவலன் ஆ) காவலன்

இ) நெடுஞ்செழியன் ஈ) செங்குட்டுவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. உவமைத் தொகைக்கு எடுத்துக் காட்டு

அ) நிலாமுகம் ஆ) வட்டக்கல் இ) இராப்பகல் ஈ) கடிநாய்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. கோட்டையைச் சுற்றி அரனுக்காக அகழப்பட்ட நீர்நிலை,

அ) அகழி ஆ) குளம் இ) கேணி ஈ) கிணறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. ஓங்குபுகழ் கல் எனப் போற்றப்படுவது,

அ) செங்கல் ஆ) கருங்கல் இ) நடுகல் ஈ) பொங்கல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. இன அடையாளத்தைக் காட்டுவது எது?

அ) உணவு ஆ) மொழி இ) உடை ஈ) கலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது எனும் பழமொழி உணர்த்துவது,

அ) தோற்கும் ஆற்றல் ஆ) சூட்டின் கொடுமை
இ) ஏமாற்றம் ஈ) பட்டறிவின் பயன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. தெற்காசியாவிலே சிறந்து விளங்கிய நூலகங்களில் ஒன்று,

அ) யாழ்நூலகம் ஆ) இணைய நூலகம்
இ) மின்நூலகம் ஈ) தஞ்சைநூலகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. யாழ்நூலகம் எரியுண்டபோது, உயிர்துறந்த அருட்தந்தை,

அ) தாவீது அடிகள் ஆ) தனிநாயகம் அடிகள்
இ) ஞானப்பிரகாசர் ஈ) வீரமாமுனிவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. சின்னஞ்சிறிய - இது எவ்வகைத் தொடர்?

அ) அடுக்குத்தொடர் ஆ) இரட்டைக்கிளவி
இ) இணைமொழி ஈ) அடுக்கிடுக்குத்தொடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. நாவலந்தீவு என அழைக்கப்பட்ட நாடு,

அ) கேரளா ஆ) மலேசியா இ) குமரிக்கண்டம் ஈ) இந்தியா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. பஃறுளி, குமரி எனும் ஆறுகள் பாய்ந்தோடிய தமிழர் நிலம் எது?

அ) சிந்துவெளி ஆ) குமரிக்கண்டம் இ) இலங்கை ஈ) பர்மா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. இராவணனது செங்கோலாட்சியில் சிறந்து விளங்கிய தமிழகத்தின் தலைநகர்,

அ) இலங்கை ஆ) மதுரை
இ) யாழ்ப்பாணம் ஈ) காவிரிப்பூம் பட்டினம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. இராவணகாவியத்தை எழுதியவர்

அ) நக்கீரர் ஆ) குழந்தை இ) கம்பர் ஈ) காளிதாசன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. செயப்படுபொருள் குன்றிய வினையடி,

அ) சிரி ஆ) படி இ) பாடு ஈ) எடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. ஒருசெயலை எழுவாயே செய்தால் அதை எவ்வாறு அழைப்பர்?

அ) எழுவினை ஆ) பிறவினை இ) தன்வினை ஈ) முன்வினை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. வாய்வழியாக இன்றுவரை பாடப்பட்டுவரும் பாடல்களை இவ்வாறு அழைப்பர்.

அ) சினிமாப்பாடல் ஆ) மேற்கத்தயப்பாடல்
இ) நாட்டார்பாடல் ஈ) மெல்லிசைப்பாடல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. கற்றோரும் தவறுவிடுவோர் என்ற கருத்தை விளக்கும் பழமொழி

அ) யானைக்கும் அடி சறுக்கும்
ஆ) காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு
இ) பூவுடன் சேர்ந்த நாரும் மணக்கும்
ஈ) கோழி மிதித்து குஞ்சு சாகாது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. பண் என்றால்

அ) ஐந்து நரம்புள்ள வீணையின் இசை
ஆ) ஏழு நரம்புள்ள வீணையின் இசை
இ) நான்கு நரம்புள்ள வீணையின் இசை
ஈ) ஒரு நரம்புள்ள வீணையின் இசை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. ஒன்னார் என்ற சொல் குறிக்கும் பொருள்.

அ) நண்பர் ஆ) பகைவர் இ) உறவினர் ஈ) குடும்பத்தினர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. மாசாத்துவான் என்பவன்

அ) நிலவணிகன் ஆ) கடல்வணிகன்
இ) நகைவணிகன் ஈ) உடைவணிகன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. உள்ளும் புறமும் தூய்மையாக இருப்பவனே சான்றோன்.
இதில் உள்ளும் புறமும் என்பது,

அ) பொதுமொழி ஆ) இணைமொழி இ) நல்மொழி ஈ) அடுக்குத்தொடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. எதனால் நாவலந்தீவில் இருந்து உடைந்து இலங்கை தனித்தீவானது?

அ) போர் ஆ) பூகம்பம் இ) கடற்கோள் ஈ) சூறாவளி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. விசயன் வருகை பற்றிக் கூறும் நூல் எது?

அ) மகாவம்சம் ஆ) சூளவம்சம் இ) திருக்குறள் ஈ) சிலப்பதிகாரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. கண்ணகிக்கு இலங்கையில் கோயில் கட்டிய மன்னன்

அ) செங்குட்டுவன் ஆ) கயவாகு இ) விசயபாகு ஈ) குத்திகன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. சிலப்பதிகாரக் கதை தொடங்கிய நாடு

அ) சோழநாடு ஆ) பாண்டிநாடு இ) சேரநாடு ஈ) இலங்கைநாடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. சோழரிடம் தோற்ற பாண்டியர், தம் முடியை எங்கு பாதுகாத்தனர்?

அ) சேரநாட்டில் ஆ) மதுரையில் இ) சுமத்திராவில் ஈ) இலங்கையில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. அரசியலாளருக்கு அஞ்சல் எழுதும் போது இடம்பெற வேண்டிய விளிப்பு

அ) ஐயா ஆ) மாண்புமிகு இ) அன்புள்ள ஈ) மேதகு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. மானிடா சொல் என்ற கவிதையை எழுதியவர்

அ) இரவி ஆ) அம்பி இ) உதயவீரயன் ஈ) இளந்திரையன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

## 2) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. கோவலன் வெட்டுண்ட வேளையில் ஆயர் பாடியில் தோன்றிய தீக்குறிகள் இரண்டினைத் தருக?

2. தாய் மொழியை ஒருவர் கைவிட்டால் என்ன விளையும் என்று எச்சரிக்கிறார் கவிஞர் அம்பி?

3. இராவணனின் ஆட்சிச் சிறப்பை விளக்குக?

4. 'நல்லரசு இல்லா நாட்டிலும் கொல்புலி வாழும் காடு நன்று' என்பதனை விளக்குக?

5. சோழர் ஏன் இலங்கை மீது போர் தொடுத்தனர்?

(புள்ளிகள் 10)

6. யாழ் நூலகம் எக்கட்டிடக் கலையை ஒத்ததாக உள்ளது? இதனை வடிவமைத்தவர் யார்?

______________________________________________

______________________________________________

______________________________________________

7. நாற்றை நெருக்கி நடவேண்டும் என வயற்காரன் கூறுவது ஏன்?

______________________________________________

______________________________________________

______________________________________________

## 3) பாடலை வாசித்து, முழுவிடை தருக.

*எழுந்திரு இளந்தமிழா*
*இனம்மொழி காப்போம் வா!*
*முழங்கிடு: முன்னே வா,*
*முகவரி மீட்போம் வா!*

*உன்மூச்சு தமிழ்க்காற்று*
*உன்நாக்கு தமிழ்ஊற்று*
*உன் நரம்பில் இனமானம்*
*உன்னெழுச்சி படையெழுச்சி*

*தாய் மொழியில் பேசுவதைத்*
*தரக்குறைவாய் எண்ணுவதா?*
*தாய்மொழியே வளர்ச்சிக்குத்*
*தடையென்று சொல்வதா?*

*இடம்மாறிச் சூழிமாறி*
*இனமான முகம்மாறித்*
*தடம்மாறும் தமிழனுக்குத்*
*தாய்மொழிமேல் பற்றுவர,*
*தடைகளை எற்றிவிடு*
*தாய்மொழியை ஏற்றிவிடு.*

1. யாருக்குத் தாய்மொழி மேல் பற்று வர வேண்டும் எனக் கூறுகிறார் கவிஞர்?

______________________________

______________________________

2. தரக்குறைவாய் எதை எண்ணுவதாகக் கவிஞர் குறிப்பிடுகின்றார்?

______________________________

______________________________

3. தாய்மொழி எதற்குத் தடையாக இருப்பதாக சிலர் கருதுகின்றனர்?

______________________________

______________________________

4. தாய்மொழியில் பற்று வர என்ன செய்ய வேண்டும்?

______________________________

______________________________

5. கவிஞரின் உணர்வு பற்றி உமது கருத்து என்ன?

______________________________

______________________________

(புள்ளிகள் 10)

## 4) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

குமரிக்கண்டமானது இன்றைய கன்னியாகுமரிக்குத் தெற்கே நெடுந்தொலைவுக்குப் பரந்திருந்தது. பஃறுளியாற்றுக்கும் குமரியாற்றுக்கும் இடையே நாற்பத்தொன்பது நாடுகள் இருந்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன. அவை கடலில் மூழ்கிவிட்டன. இச்செய்தி பற்றிய குறிப்பு நோவாவின் கதையில் கூறப்பட்டுள்ளதாக அறிஞர் கூறுவர்.

குமரிக்கண்ட மக்களான தமிழர் அதன் அழிவுக்கு முன்னரே, இலக்கிய இலக்கண வளங்கொண்ட மொழியையும் நாகரிகத்தையும் கொண்டிருந்தனர். எனவே, உலகின் முதல் மாந்தவினம் தமிழர் என்பதையும், முதன்மொழி தமிழ் என்பதையும் அறிய முடிகிறது. இந்த உண்மைகளை மேற்குலக ஆய்வாளரும் ஏற்கும்படி மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் ஆய்ந்து நிறுவியுள்ளார்.

குமரிக்கண்ட மக்கள் நாகரிகம் முதிர்ந்த நுண்மதியாளராக இருந்தமையால் எல்லா எழுத்து ஒலிகளையும் செம்மையாக ஒலித்தனர். எல்லாப் பொருட்களையும் வினைகளையும் நுட்பமாக வேறுபடுத்தி அறிந்தனர். அவற்றுக்கு ஏற்ற சிறப்புச் சொற்களை வழங்கிப் பகுத்தறிவு அடிப்படையில் பொருட்களைப் பாகுபடுத்தித் தம்மொழியை வழங்கியும் வளர்த்தும் வந்தனர். இப்படியாகப் பிறந்து வளர்ந்து செழித்துவந்த தமிழ் மொழியே உலகிடைத் தோன்றிய முதலாவது திருந்திய மொழியாகும்.

எகிப்திய, சுமேரிய அகழ்வாய்வுகளில் கிடைக்கப்பெற்ற சான்றுகளும், எருசலேமில் உள்ள சொலமன் கோவிலில் புதைக்கப்பட்டு இருந்ததாக கூறப்படும் ஆவணங்களும் குமரிக்கண்ட மக்களின் வரலாற்றைக் கூறுவதாக அறிஞர் கருதுகின்றனர். எனவே குமரிக் கண்டத்திலேயே மாந்தன் தோன்றினான் என்பதும் அவனே தமிழன் என்பதும் அவன் பேசிய மொழியே தமிழ் என்பதும் புலனாகின்றது.

1. குமரிக்கண்ட மக்களின் வரலாற்றைக் கூறுபவை எவை?

________________________________________

________________________________________

________________________________________

2. குமரிக்கண்ட மாந்தன் நுண் அறிவியல் ஆற்றல் உடையவன் என்பதற்கு இங்கு கூறப்பட்ட சான்றுகள் எவை?

________________________________________

________________________________________

________________________________________

3. உலகின் முதல் மாந்தவினம் எது?

________________________________________

________________________________________

________________________________________

4. பஃறுளி ஆற்றுக்கும் குமரி ஆற்றுக்கும் இடையே 49 நாடுகள் இருந்ததாகக் கூறும் சான்றுகள் எவை?

________________________________________

________________________________________

________________________________________

5. இப்பந்தியில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

________________________________________

________________________________________

________________________________________

(புள்ளிகள் 10)

## 5) அனைத்து இலக்கண/மொழியியல் வினாக்களுக்கும் விடை தருக.

1. வேற்றுமைத் தொகை என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக?

2. செயப்படுபொருள் குன்றிய வினை செயப்படுபொருள் குன்றாத வினை ஒவ்வொன்றிற்கும் சொல்லியங்கள் எழுதுக?

3. தரப்பட்டுள்ள உவமைத் தொடர்களை வைத்து சொல்லியம் எழுதுக?

கிணற்றுத் தவளை

நகமும் சதையும் போல

வேலியே பயிரை மேய்ந்தது போல

4. தரப்பட்டுள்ள மரபுத்தொடர்களை வகைப்படுத்துக.

**சின்னஞ்சிறிய, மதமத, உயரஉயர, நடுநடுங்கி, நறநற, பாம்புபாம்பு**

| அடுக்குத்தொடர் | இரட்டைக்கிளவி | அடுக்கிடுக்குத் தொடர் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

3. தரப்பட்டுள்ள தன்வினைச் சொற்களை பிறவினைச் சொற்களாக மாற்றி எழுதுக?

கட்டினான் ______________________________

உண்டான் ______________________________

போக்கினான் ______________________________

(புள்ளிகள் 15)

## 6) தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.

மாணவர்கள் எதிர்கால குமுகாயத்தினைக் கட்டியெழுப்பும் சிற்பிகள். இவர்கள் குமுகாயத்தினால் பெரிதும் மதிக்கப்பட வேண்டியவர்கள். இத்தகைய சிறப்புமிக்க மாணவர்கள் தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்வதற்குத் தங்களை அணியம் (தயார்) செய்தல் வேண்டும். பெற்றோர் சொற் கேட்டல், பெரியேரை மதித்தல், ஆசிரியரைப் பணிதல் என்னும் நற்குணங்களைத் தங்களிடம் வளர்த்துக் கொள்ள வேண்டும். ஒற்றுமை, புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு என்பனவற்றின் மூலம் சக மாணவர்களிடையே நல்லுறவைப் பேணவேண்டும். கலங்கரை விளக்கங்களாகத் திகழும் ஆசிரியர்களின் வழிகாட்டலுடன் தங்கள் கல்வி என்னும் கடலின் கரையைத் தொட வேண்டும். ஆசிரியரின் நன்மதிப்பைப் பெற எந்த மாணவனும் தவறக்கூடாது. ஆசிரியர்கள் பெரிதும் மதிக்கப்பட வேண்டியவர்கள். மாணவர்களின் அறிவுக்கண்ணைத் திறந்து விடும் ஆசிரியர்களின் நல்வாழ்த்துகள் என்றும் நல்ல எதிர்கால வாழ்வை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கும்.

**சுருக்கத்திற்கான குறிப்புகள் :**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

(புள்ளிகள் 05)

7) **கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- **சிலப்பதிகாரத்தின் சிறப்புகளைத் தொகுத்து** எழுதுக.
- **நாட்டார் பாடல்களின் சிறப்புகளையும் பாடநூலில் உம்மைக் கவர்ந்த நாட்டார் பாடல் பற்றியும் விளக்குக.**
- **வாழிடங்களில் தமிழ்கல்வியின் முதன்மை பற்றி உமது கருத்துகளைக் கட்டுரையாக எழுதுக.**
- **நீர் கலந்து கொண்ட மே18 விடுதலைப் பேரணி.**

(புள்ளிகள் 20)